**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC. 797 of 2023 |
| Prosecution Witness | : | PW1 |

01.04.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Calling | : ஓட்டுனர் |
| Father Name | : ரத்தினம் | Religion | : |
| Village | : துறையூர் | Age | : 58 |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை –**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னது. அதில் உள்ள சங்கதிகள் உண்மையானது. எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 21.10.2023 ம் தேதியிட்ட ரூ.3,00,000/-க்குண்டான KVB துறையூர் கிளைக்குண்டான காசோலை எண்.000147 அசல். அது ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 21.10.2023 ம் தேதி முறையீட்டாளர் காசோலையை வங்கியில் செலுத்தியதற்கான வங்கி ரசீது அசல். அது ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 27.10.2023 ம் தேதி காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ அசல். அது ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 01.11.2023 ம் தேதி முறையீட்டாளர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல். அது ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 02.11.2023 ம் தேதி முறையீட்டாளர் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல். அது ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்